## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.179/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சுரேஷ் | Prosecution | LW-1 as PW5. |
| Father Name | குஞ்சு | Defence | |
| Village | குச்சிபாளையம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 52/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**09.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து வெளிநாட்டில் வசித்து வேலை செய்து வருகிறேன். கடந்த சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை ஒரு நாள் காலை 8.30 மணியளவில் நான் எனது வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த போது அங்கு சிலர் கூட்டமாக சண்டையிட்டு கொண்டு இருந்தார்கள். கூட்டத்தை வேடிக்கை பார்க்க நான் அங்கு சென்ற போது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் என்னை தகாத வார்த்தைகளால் திட்டியும் அறுவாளால் என்னை பின்னால் இருந்து தாக்கினார்கள். அந்த நேரம் எனக்கு சுய நினைவு இல்லாததால் யார் என்னை தாக்கினார்கள் என்று என்னால் பார்க்க இயலவில்லை எதிரிகளுக்கும் எனக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் என்னை தாக்கியிருப்பார்கள் என நினைத்து மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். இந்நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்க வில்லை .

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய**

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.02.09 19:34:36 +0530

**அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது தெருவை சேர்ந்தவர்கள். எதிரிகளுடன் நான் சமாதனமாக சென்று விட்டேன் என்றால் சரிதான். கடந்த 22.01.2020 ம் தேதி காலை 8.30 மணிக்கு ஆஜர் எதிரிகள் என்னை தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியும், அறுவாளாலும் தாக்கியும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.09 19:34:41 +0530